සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
**Department of Samurdhi Development**

සමාජ සවිබලගැන්වීම් හා සුබසාධන අමාත්‍යාංශය
சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு
**MINISTRY OF SOCIAL EMPOWERMENT AND WELFARE**

| මගේ අංකය<br>எனது இல **DDD/HO/MF/**<br>My No | ඔබේ අංකය<br>உமது இல ............................................<br>Your No | දිනය<br>திகதி **2017.05.29**<br>Date |
|---|---|---|

சகல மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்களுக்கும்,

**<u>சமுர்த்தி வங்கி மற்றும் சமுர்த்தி வங்கிச் சங்கங்களின் பெயர் பலகையினை புதுப்பித்தல்.</u>**

மேற்படி விடயம் தொடர்பில் வெளியிடப்பட்ட எனது DDD/HO/MF/05 என்ற இலக்கமும் 2017.03.09 ஆம் திகதியிடப்பட்டதுமான கடிதத்திற்கு மேலதிகமாக.

அதன் பிரகாரம் 2013 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வாழ்வின் எழுச்சி சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம் 2017 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க திருத்திய சமுர்த்தி சட்டத்தின் கீழ் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களமாக திருத்தப்பட்டது.

அந்த மாற்றத்துடன் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகள் மற்றும் சமுதாய அடிப்படை வங்கிகள் என பயன்படுத்திய வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி மற்றும் வங்கிச் சங்கங்கள் எதிர்காலத்தில் **சமுர்த்தி வங்கி மற்றும் சமுர்த்தி வங்கிச் சங்கங்கள்** என திருத்தஞ் செய்யப்படுகின்றது.

ஆகையினால் தங்களது மாவட்டத்தில் அமைந்துள்ள சமுர்த்தி வங்கி மற்றும் சமுர்த்தி வங்கிச் சங்கங்களின் தற்போது அமைக்கப்பட்டுள்ள பெயர்ப்பலகைகள் புதுப்பிக்கப்படல் வேண்டும்.

அதற்கமைய சமுர்த்தி வங்கி வலையமைப்பினை இலகுவில் இனங்காணக் கூடியதாகவும் ஒரே வகையான தன்மையுடனும் உள்ளதாக மக்களிடத்தேயே எடுத்துச் செல்லும் பொருட்டு தற்போது பயன்படுத்தப்படுகின்ற பெயர்ப்பலகைகளைப் பயன்படுத்தி இணைக்கப்பட்டுள்ள படிவத்தின் பிரகாரம் **"சமுர்த்தி வங்கி மற்றும் சமுர்த்தி வங்கிச் சங்கம்** என" 5"X3" அளவிலான பெயர்ப்பலகை ஒன்றினை நிர்மானிக்க பிரேரனை முன்வைக்கப்பட்டுள்ளது.

**1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya ,Battaramulla**

| | අධ්‍යක්ෂ ජනරාල්<br>பணிப்பாளர் தலைமையதிபதி<br>Director General | අධ්‍යක්ෂ (මානව සම්පත්)<br>பணிப்பாளர் ( மனிதவளம்)<br>Director (Human Resource) | ප්‍රධාන ගණකාධිකාරී<br>பிரதான கணக்காளர்<br>Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය)<br>பணிப்பாளர் (குறு நிதி )<br>Director ( Micro Finance) | කාර්යාලය<br>அலுவலகம்<br>Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2873802/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 011-2887280 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | **Hot Line: 011- 2887722** |
| E-mail- | dg@divineguma.gov.lk | diradmin@divineguma.gov.lk | finance@divineguma.gov.lk | **Hot Line:0112-885582** | |
| | | **Hot Line : 0112-889007** | | | |

**mi/tran**

ஆகையினால் சமுர்த்தி வங்கிகளிலும், சமுர்த்தி வங்கிச் சங்கங்களிலும் பெயர்ப்பலகையினை அமைத்து அது பற்றி எனக்கு எழுத்து மூலம் அறிக்கையிடுமாறு இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன். பெயர்பலகையினைத் தயாரித்துக் கொள்ளும் பொருட்டு தேவையான நிதி ஒதுக்கீடுக் அந்தந்த வங்கிகளின் கட்டிட பராமரிப்புச் செலவில் உயர்ந்தபட்சம் ரூபா 6,000.00 இற்கு உட்பட்டதாக வங்கிச் செலவாக மேற்கொள்ளவும் இத்தால் அங்கீகாரத்தினை வழங்குகின்றேன்.

நீல் பண்டார ஹப்புஹின்ன.
பணிப்பாளர் தலைமையதிபதி

பிரதிகள்:-

1. செயலாளர், சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு - அ.கொ.பொருட்டு
2. சகல மாவட்டச் செயலாளர்கள் - அ.கொ.பொருட்டு
3. சகல பிரதேச செயலாளர்கள் - அ.கொ.பொருட்டு
4. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் - அ.கொ.பொருட்டு

TRANSLATED BY – M.M.M.JAWHAR (Translator)